"ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும்,
உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு." சங்கீதம் 16:11.

# வேதமாணவர்களின்

# 34வது ஆவிக்குரிய மாநாடு

## நாள்: 28 & 29.12.2024

### சனி & ஞாயிறு

# இரட்சிக்கப்படுதலின்
# மனித வேலைகளும்,
# தேவனுடைய வேலைகளும்



# பிலிப்பியர் 2 : 13

13. ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி **விருப்பத்தையும் செய்கையையும்** உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.



ஒருவர் கர்த்தருடைய ஜனங்களில் ஒருவராக ஆனவுடனேயே இரட்சிக்கப்பட்டவர் என்பது பொதுவாக ஏற்றுகொள்ளப்பட்ட நம்பிக்கையாக இருக்கிறது. இதன் ஒரு பகுதியை நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். “நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்”



# ரோமர் 5 : 1

இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

ஆனால் உண்மையான இரட்சிப்பை இன்னும் நாம் அடையவில்லை. முதலாம் உயிர்த்தெழுதலின் மறுரூபத்தை அடையும்வரை நாம் அதை அடைய முடியாது.

# மத்தேயு 24 : 13

13. முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.



பரம அழைப்பான இந்த இரட்சிப்புக்கு குணலட்சண அபிவிருத்தியின் மூலம் பிரயாசப்படவேண்டும்

***This salvation***

***to the High Calling is to be worked out by the development of character.***

# 2 தீமோத்தேயு 2 : 20

ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள்.

கர்த்தருடன் உடன்படிக்கைக்குள் நுழைந்தவர்கள் தெய்வீக நிலையிலோ அல்லது அதற்கு அடுத்த நிலையிலோ ஆவிக்குரிய சுபாவத்தை அடைய வேண்டும்.

இல்லையென்றால் அவர்கள் எல்லாவற்றையும் இழந்து இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்.

தெய்வீக சுபாவத்தை அடைவதற்கான நமது அழைப்பின் ஒரே நம்பிக்கைக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். சுவிசேஷ யுகத்தில் வேறு எந்த அழைப்பும் கொடுக்கப்படவில்லை.

# எபேசியர் 2 : 8 -9

8\. கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;

9\. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;

# இரட்சிக்கப்படுதலின்
# மனித வேலைகளும்,
# தேவனுடைய வேலைகளும்

தேவனுக்கு முன்பாக நாம் நீதிமானாக காண்பிப்பதற்குரிய கிரியை நடப்பிக்கும் சந்தர்ப்பம் மனிதனாக நமக்கு இல்லை.



**God who is perfect, is not pleased to receive anything imperfect, either works or anything else.**

தேவனுடைய குடும்பத்திற்குள் நாம் ஏற்றுக்கொள்ளப்படும் வரை நாம் செய்யும் எந்த வேலையும் ஏற்புடையதல்ல.

பரிபூரணராயிருக்கூடிய தேவனுக்கு அபூரணமான வேலையாயிருந்தாலும் வேறு எதுவாக இருந்தாலும் அவருக்கு பிரியமானதல்ல.

**Until we have been accepted in to god's family no works that we could do would be acceptable**

# கலாத்தியர் 4 : 6

மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால்,

அப்பா, பிதாவே!

என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்.

# எபேசியர் 2 : 19

ஆகையால், நீங்கள் இனி
அந்நியரும் பரதேசிகளுமாயிராமல்,
பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய
வீட்டாருமாயிருந்து,

ஆனால் நாம் கிரியைகளினாலல்ல, விசுவாசத்தினால் நமது பாவங்களுக்கான மன்னிப்பை பெற்று, அர்ப்பணத்தினாலும் ஆவியின் ஜெநிப்பித்தலினாலும் தேவனுடைய குமாரர்களான பிறகு, தேவனுக்கு பிரியமான வேலையை செய்வதற்குரிய காலம் வருகிறது. ஏனெனில் அப்பொழுது தேவனுடைய குடும்பத்தில் அங்கத்தினராக இருக்கிறோம். மேலும் இந்த ஜெனிப்பித்தலினால் நமக்குள் இருக்கிற பரிசுத்த ஆவி தன்னை காண்பிக்கவும் சில வேலைகளை செய்யவும் இப்பொழுது சந்தர்ப்பம் பெறுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வோமானால் ஒரு அபூரண மனிதனாக நமது இரட்சிப்புக்காக கிரியை நடப்பிக்க முடியாது. ஆனால் ஒரு புது சிருஷ்டியாக இதைச் செய்ய முடியும்.

# படிநிலைகள்

1. படிநிலை : விசுவாசத்தைக் கொண்டு நீதிமானாக்கப்படுதல்

2. படிநிலை : தியாக பலியோடு கூடிய அர்ப்பணிப்பு

3. படிநிலை : ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல்

4. படிநிலை : இவைகளைத் தொடர்ந்து - குணலட்சனங்களின் வளர்ச்சி

# பிலிப்பியர் 4 : 13

**எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.**

# பிலிப்பியர் 4 : 13

**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே.......**



# வெளிப்படுத்தல் 1 : 6

நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

ஒரு குழந்தையானது தனது அங்க அசைவுகளை பெறும்வரை எப்படி பலம் பெறாதிருக்கிறதோ, அதே போல புது சிருஷ்டியானது அதன் ஆரம்பத்தில் சுறுசுறுப்பாக இருக்கவோ பலம் மற்றும் குணலட்சணத்தில் அபிவிருத்தி அடையாமலோ இருக்கிறது.



நமது அர்ப்பணத்தின்போது கர்த்தரால் நாம் ஏற்றுக் கொள்ளப்படும்போது நாம் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம்.



ஆனால் இந்த புது சிருஷ்டியின் வித்து, நீண்ட நாட்களுக்கு அமைதியாக இருக்க முடியாது. அது உணவினாலும் சத்துள்ள ஆகாரத்தினாலும் வளர வேண்டும்.

ஆரம்பத்தில் நாம் “புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருக்கிறோம்.” புது சிருஷ்டியாக நாம் பயிற்சி செய்வதன் மூலம் நாம் பெலம் பெறுகிறோம்



புது சிருஷ்டியானது தனது பழைய சரீரத்தை எடுத்துக் கொண்டு அதை தனது வேலைக்காரனாக்குகிறது. பழைய சரீரமானது ஒரு பலியாக கொடுக்கப்பட்ட பிறகு சட்டப்பிரகாரம் அது மரித்திருக்கிறது. ஆனால் நாம் போதுமான அளவு விருத்தியடைந்து, உயித்தெழுதலின் சரீரத்தை பெறுமளவும் இங்கு நமது கிரியை செய்து முடிக்கப்படும் வரைக்கும் புதிய சரீரத்தின் உரிமையாக பழைய சாரீரத்தைப் பெற்றிருக்கிறது.

இந்த அபூரண, பழைய சரீரத்தை நாம் பெற்றிருப்பதினாலேயே நாம் மாம்சத்தில் இருக்கும் வரை கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை அணிய வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.



# பிலிப்பியர் 2 : 13

ஏனெனில் தேவனே தம்முடைய
தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும்
செய்கையையும் உங்களில்
உண்டாக்குகிறவராயிருக்கிறார்.

# 1 பேதுரு 1 : 19

குற்றமில்லாத மாசற்ற
ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின்
விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே
மீட்கப்பட்டீர்களென்று
அறிந்திருக்கிறீர்களே.

நமது வாழ்க்கையின் சந்தர்ப்பங்கள் மற்றும் நிகழ்வுகள் மூலமாக அவரது பிள்ளைகளாகும்படியான வழியை நமக்கு காண்பித்தார்

**All this is the work of God, and in the Scriptures is called drawing and calling.**

# யோவான் 6 : 44

என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்.

# யோவான் 15 : 2

என்னில் கனிகொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.

**To give them all the experiences requisite to their fruit bearing.**

**He works through the world, through the brethren, through**

**all the varied experiences of life, and through His precious promises.**

தேவனுடைய வேலை நம்மில் அபிவிருத்தி அடைகிறது.

- அவர் உலகத்தின் மூலமாகவும்
- சகோதரர்கள் மூலமாகவும்
- வாழ்கையின் அனைத்து பல்வேறு விதமான அனுபவங்கள் மூலமாகவும்
- அவரது விலையேறப்பெற்ற அவரது வாக்குத்தத்தங்கள் மூலமாகவும் அவர் வேலை செய்கிறார்

நாம் தேவனை நேசிக்கிறதற்குதக்கதாக நமது அனுபவங்களின் மூலம் நாம் நன்மையைப் பெறுகிறோம்



# ரோமர் 8 : 28

அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

நமது முன்னேற்றம் என்பது கிருபையில் வளர்வதிலும், அறிவில் வளர்வதிலும், தேவனுடைய சாயலுக்கு ஒப்பான குணலட்சணத்தில் படிப்படியாக வளர்வதிலும் இருக்கிறது. இப்படியாக அவர் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் அவருடைய பிள்ளைகளில் உண்டாக்குகிறார். அவரது நல்ல விருப்பம் என்ன என்பதை அதிகமதிகமாக நமக்கு அவர் காண்பிக்கிறார். தேவனுடைய சித்தம் தேவனுடைய சிந்தை என்ன என்பதை தேவனுடைய பிள்ளையாகிய ஒருவன் அர்ப்பணம் செய்தபோது உணர்வதைக் காட்டிலும் பிற்காலத்தில்தான் அதிகமாக உணர்கிறான். அவன் நெருக்கமான வழியில் நுழையும்போது காரியங்களை காண்பிப்பதைக் காட்டிலும் பின்னர் முற்றிலும் வேறுவிதமாக அதை காணும்படி ஆகிறான்

# இரட்சிக்கப்படுதலின் மனித வேலைகளும் தேவனுடைய வேலைகளும்

**R 5758 R 5303**


AMEN